**16.10.2019 அ.வ.எண். 56/2015 வா.த.சா. 1 ஷாருமா**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1910ம் வருடத்தில் ஏற்பட்ட ஆவணத்திற்கு பின்பு என்னென்ன ஆவணங்கள் குறித்து தாவா சொத்து ஏற்பட்டது என்பது குறித்த விவரங்களை நாங்கள் வில்லங்க சான்றிதழ் பெற்று தெரிந்துகொள்ளவில்லை என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்த பின்பு வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தோம். வில்லங்க சான்றிதழில் தாவா சொத்து சம்மந்தமாக என்னென்ன ஆவணங்கள் ஏற்பட்டது என்று குறிப்பாக எனக்கு தெரியாது. ஆனால் தாவா சொத்தை எனது தாயார் எனக்காகவும், எனது சகோதர, சகோதரிகளுக்காகவும், மற்ற பாகஸ்தர்களும் சேர்ந்து மொத்தமாக 21 நபர்கள் 4ம் பிரதிவாதியின் தாயார் ஹபிபுன்னிசா 25.01.1984 அன்று கிரைய பத்திரம் எழுதிகொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். அதைகுறித்து 2015ம் வருடம் எனக்கு தெரியவந்தது. எனக்கு தெரியவந்ததன் பேரில அதைகுறித்து எனது தாயரிடம் நான் விசாரித்தேன். எனது தாயார் 1984ம் வருடம் ஏற்பட்டதாக கூறினார். குன்னா சாயபு, சத்து சாயபு, தக்கைஅலி சாயபு ஆகியோர்களின் பாகங்களை அவரது வாரிசுகளிடமிருந்து 4ம் பிரதிவாதி மற்றும் அவரது தாயார் கிரையம் பெற்றனர் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. தக்கைஅலி சாயபு என்பவரின் வாரிசுதாரர்கள் எழுதிகொடுத்த கிரையத்தை குறித்து மட்டுமே எனக்கு தெரியும். அதை குறித்து நான் வில்லங்கசான்றிதழை பார்த்து தெரிந்துகொள்ளவில்லை. குன்னா சாயபு 1910ம்வருடம் ஏற்பட்ட கிரைய பத்திரதில் உள்ள சொத்துகளை குன்னா சாயபு, சத்து சாயபு, தக்கைஅலி சாயபு ஆகியோர்களின் பாகங்களை அவரது வாரிசுதாரர்களிடமிருந்து 4ம் பிரதிவாதி மற்றும் அவரது பிரதிவாதியின் தாயார் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். 1910ம் வருடம் ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் எனது தகப்பனார் அலிஜான் சாயபுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் அளவுகள், ஜக்குபந்தி விவரங்கள், விஸ்தீரணத்தை காட்டும் வகையில் ஆவணங்கள் எதையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை.எனது தாத்தா குன்னா சாயபுக்கு பர்தியப்பட்ட சொத்துக்களில் எனத தகப்பனார் மற்றும் அவரது சகோதர சகோதரிகள் மற்றும் எனது தாயார் ஆகியோர்களுக்கு பாகம் இருந்தது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு 9 நபர்களுக்கு பாகம் இருந்தது என்று சொன்னால் சரிதான். குறிப்பாக ஒவ்வொரு பாகஸ்தர்களுக்கும் எவ்வளவு அளவுகள் கொண்ட சொத்துக்கள் பாகங்களாக இருந்தன என்பதை குறித்த ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனத தாத்தா குன்னா சாயபுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் முழுவதையும் குறிப்பான அளவுகள் கொண்ட பாகங்களாக பிரித்துகொள்ளாமலேயே முழுவதுமாக 4ம் பிரதிவாதியின் தாயாருக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் இறந்துபோன பின்பு என்னையும் எனது சகோதர சகோதரிகளையும் எனது தாயார் தான் பாதுகாத்து வந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் டைலர் கடை நடத்திவந்தார். எனது தகப்பனார் பணம் எதையும் சேமித்து வைக்கவில்லை. எனது தகப்பனார் இறந்த சமயத்தில் நாங்கள் கூரை வீட்டில்தான் வசித்துவந்தோம். அந்த சொத்து மட்டுமே எங்களுக்கு இருந்தது என்றால் சரிதான். நாங்கள் குடியிருந்த கூரைவீடு தாவா சொத்தில் உள்ள கூரைவீடு அல்ல.

அது தாவா சொத்தின் அருகே உள்ள இடத்தில் உள்ள அந்த கூரை வீடு அமைந்துள்ளது. தாவா சொத்தில் உள்ள வீடு தட்டோடு வீடு ஆகும். குன்னா சாயபு என்பவரின் வாரிசுதாரர்கள் தாவா சொத்து மற்றும் அதிலிருந்து தட்டோடு ஆகியவற்றைதான் 4ம் பிரதிவாதியின் தாயாருக்கு கிரையம் செய்துகொடுத்தனர் என்றால் சரிதான். 1984ம் வருடம் வரை தாவா சொத்திலிருந்த தட்டோடு வீட்டை நாங்கள் பயன்படுத்தி வந்தோம். 25.01.1984 அன்று ஏற்பட்ட கிரையத்தின் பின்பு நாங்கள் தாவா சொத்தின் அருகே உள்ள கூரை வீட்டில் மட்டுமே வசித்துவந்தோம் தாவா சொத்தில் உள்ள தட்டோடு வீட்டை நாங்கள் பயன்படுத்தவில்லை. தாவா சொத்து மற்றும் அதில் இருந்த வீட்டின் சுவாதீனதை 4ம் பிரதிவாதியின் தாயார் வசம் ஒப்படைக்கபட்டது என்றால் சரிதான். எனது தாயார் துணி வியாபாரம் மற்றும் கைத்தொழில் செய்துவந்தார். எனது தாயார் எங்களை சிரமப்பட்டு பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எனது தாயார் எங்களை பராமரிக்க சிரமபட்டதால்தான் மற்ற பாகஸ்தர்களுடன் சேர்ந்து கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மற்ற பாகஸ்தர்கள் தாவா சொத்தை கிரையம் கொடுக்கவேண்டும் என்று கூறியதன் பேரில் அவரும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார். கிரைய தொகையின் பாகமாக ரூ.240/- பெற்றுக்கொண்டுள்ளார். எனது தாத்தா குன்னா சாயபு இறந்த காலத்தில் அவரது கடைசி காரியங்களை எனது தாயார் சேர்ந்து செய்தார் என்று சொன்னால் சரிதான். 1984ம் வருடம் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் எனது தாத்தா இறந்த சமயத்தில் ஏற்பட்ட செலவுகளுக்காக ரூ.635/- பாகஸ்தர்கள் பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் எனது தாத்தாவின் கடைசி காரியங்களை எனது தகப்பனார் முன்னின்று செய்தார். அந்த சமயத்தில் எனது தகப்பனார் செலவுகளை செய்தார் அவ்வாறு செலவுகள் செய்யப்பட்டதை குறித்து எனது தாயார் கூறிவந்ததன் பேரில் எனக்கு தெரியவந்தது. எனது தகப்பனார் காலமான பிறகு எனது தாயார் நான் மற்றும் எனது சகோதர சகோதரிகள் ஒரே குடும்பமாக வசித்துவந்தோம் என்று சொன்னால் சரிதான். எனது தாயாருக்கு சொந்தமான கிரைய மனை கோட்டைக்குள் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது சகோதரர் ஐயூப் அலிக்கு சொந்தமாகவும் நிலம் உள்ளன என்று சொன்னால் சரிதான். எனது தாயார் புறம்போக்கு நிலத்தில் மெத்தை வீடு கட்டி அதில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாயார் வசிக்கும் அந்த மெத்தை வீடு தாவா சொத்திற்கும், தெருவிற்கும் இடையே உள்ள புறம்போக்கு இடத்தில் உள்ள மெத்தை வீடு என்று சொன்னால் சரிதான். 4ம் பிரதிவாதி வீட்டிலிருந்து தெருவிற்கு செல்ல இடையூறாக புறம்போக்கு நிலத்தில் எனது தாயார் மெத்தை வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டு புகார் மனு அளித்தார் என்றும் மேலும் அது சம்மந்தமாக வழக்க தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது எனக்கும் எனது சகோதர சகோதரிகளுக்குமிடையே எந்த விரோதமும் கிடையாது. 4ம் பிரதிவாதி எனது தாயாருக்கு எதிராக புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து வீடுகட்டியுள்ளதாக புகார் மனு அளித்து அவரை புறம்போக்கு நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவரை துண்புறுத்தும் எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 25.01.1984 அன்று எனது தயார் தனக்ககாவும், தனது மைனர் பிள்ளைகளுக்காகவும் சேர்ந்து தனக்கான பாகத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அந்த கிரைய பத்திரத்தை ரத்து செய்யக்கோரி பரிகாரம் எதையும் நாங்கள் இந்த வழக்கில் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை அடுத்தாற்போல் நாங்கள் வசிக்கும்

கூரை வீடு அமைந்துள்ளது. தற்சமயம் 4ம் பிரதிவாதி வேலி அமைத்துள்ளார். அந்த வேலிக்கும் நாங்கள் வசிக்கும் கூரைவீட்டிற்கும் இடையே சுமார் 6 அடி இடைவெளி இருக்கும். சுமார் 4-5 வருடங்களுக்கு முன்பு தாவா சொத்தில் உள்ள 2 தட்டோடு வீடுகளை 4ம் பிரதிவாதி இடித்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். எனது தாயார் 1984ம் வருடம் கிரையம் கொடுத்த பின்பு தாவாசொத்தில் நானோ எனது தாயார் மற்றும் சகோதர சகோதரிகளோ ஒரு போதும் தாவா சொத்தை அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரிதான். பிராதில் நாங்கள் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தின் அளவுகள் மற்றும் அதன் ஜக்குபந்தி விவரங்கள் எந்த ஒரு ஆவணங்கள் அடிப்படையிலும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் வழக்கறிஞர் கூறியதன் பேரில் அந்த அளவுகளை குறிப்பிட்டுள்ளோம். பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் எனது அக்கா கூறியதன் பேரில் குறிப்பிடப்பட்டது. எவ்வாறு குறிப்பிடப்பட்டது என்று எனது அக்காவிற்குதான் தெரியும் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்தேன். மற்ற வாதிகளும் அதை படித்துபார்க்கவில்லை. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறித்தும் நாங்கள் தெரிந்துகொள்ளவில்லை. தாவா சொத்தின் பட்டா தற்போது 4ம் பிரதிவாதி பேரில் இருந்துவருகிறது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீடுகளுக்கான வரிகள் மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றை 4ம் பிரதிவாதிதான் செலுத்திவந்தார் என்று சொன்னால் சரிதான். தாவாசொத்தின் எதிரே குடிநீர் குழாய் அமைக்க நாங்கள் பல்லம் தோண்டினோம் அது சம்மந்தமாக 4ம் பிரதிவாதி புகார் மனு அளித்து அதன்பின்பு குடிநீர் இணைப்பு வழங்ககூடாது என வழக்கும் தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். நாங்கள் பல்லம் தேண்டிய சமயத்தில் எங்களிடம் பல்லம் எவ்வாறு தோண்டவேண்டுமென கூறினார். அதன்பின்பு அவர் குடிநீர் இணைப்பு வழங்ககூடாது என புகார் அளித்தார். ஜண்டா (எ) கொடி மரம் ரம்ஜான் சமயத்தில் இஸ்லாம் சமயத்தை சேர்ந்த அனைத்து நபர்களும் சேர்ந்து அந்த கொடியேற்றப்படும் என்று சொன்னால் சரிதான். அதேபோல் மற்றொரு இடத்திலும் ஜண்டா கொடிமரம் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். நான் மற்றும் எனது சகோதர சகோதரிகள் கூட்டாக இருந்துவருவதால் எங்களுக்குள் எங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படவில்லை என்று சொன்னால் எங்கள் குடும்பத்திற்குள் பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை. நான் எனது சகோதர சகோதரிகளை தனித்தனியே சம்பாதித்த சொத்துக்களைதான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்து சம்மந்தமாக எப்போதும் பாகபிரிவினை செய்துகொள்வது குறித்து பேசவில்லை.. வழக்கு மட்டுமே தாக்கல் செய்துள்ளோம். 4ம் பிரதிவாதியின் தாயார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோது தமாவா ொசதது உட்பட அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் 4ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரதின் மூலம் எழுதிகொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கை 1984ம் வருடம் ஏற்பட்ட கிரைய பத்திரம் மற்றும் 4ம் பிரதிவாதியின் தாயார் 4ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் எதையும் பெற்று நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாயார் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ள மொத்தை வீடு சம்மந்தமாக எனது தாயாருக்கும் 4ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக அவரை துன்புறுத்தும் வகையில் நானும் எனது தாயார் எனது சகோதர

சகோதரிகள் தவறான சங்கதிகள் கூறி தாவா சொத்தின் மீது தவறாக பாக உரிமை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. 25.01.1984 அன்று எற்பட்ட கிரைய பத்திரத்தின் படி தாவா சொத்து முழுவதும் 4ம் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், அந்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் அவர் 4ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி தாவா சொத்து முழுவதும் 4ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், எனது தாயார் எங்களது பாகத்தை மற்ற பாகஸ்தர்களுடன் சேர்ந்து கிரையம் எழுதிகொடுத்ததால் தாவா சொத்தில் எங்களால் பாகம் ஏதும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதியின் முழுபெயர் ஜெரினாபேகம் என்று சொன்னால் சரிதான். ஷம்ஷாத் என்பவரை நாங்கள் ஷாப்ஜாத் என அழைப்போம் என்றால் சரிதான். என்னை ஷகர்பானு என அழைப்பார்கள் என்றால் சரிதான். ஷாருமா என்ற பெயர்தான் எனக்கு வைக்கப்பட்ட பெயர் ஆகும். சிறுவயதில் என்னை ஷகர்பானு என அழைப்பார்கள். நாங்கள் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை.